மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்கக்கால அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகள்

## Similies Found in Literature of Sangam Period

கௌசல்யா லட்சுமி ஜெய்சங்கர்/ Kawselya Lechumy Jaishangkar[1]
[1]M. Ed Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: kawselyakayal@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககாலத்தில் இயற்றப்பட்ட அக இலக்கியங்களில் காதலைச் சார்ந்து அமைக்கப்பட்டுள்ள உவமைகளை ஆராய்வதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய சங்ககால அக இலக்கிய நூல்களை மையப்படுத்தியே இந்த ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. தலைவன், தலைவிக்கு இடையிலான அன்பை வெளிக்கொணரும் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கும் இவைபோன்ற அக இலக்கிய நூல்களில் காதலைச் சார்ந்து பல உவமைகள் இருப்பதைக் கண்டறிய முடிகிறது. அவ்வகையில், ஆய்வாளர் சங்ககால அக இலக்கிய நூல்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகளை இந்த ஆய்வுக்கட்டுரையில் பண்புசார் அடிப்படையில் விளக்கியுள்ளார்.

**கருச்சொற்கள்:** சங்கக் காலம், அக இலக்கியம், உவமை

**Abstract**

The aim of this research paper is to examine the similes based on love in the internal literature composed during the Sangam period. This research paper will focus on the literary texts of the Sangam period such as Natrinai, Kurundogai, Ainkurunuru, Kalithogai, and Akananuru. It can be found that there are many similes based on love in such internal literary texts which are written to highlight the love between Talaivan and Talaivi. The researcher will interpret the love similes found in the internal literary texts of the Sangam period in this research paper using qualitative analysis method.

**Keywords:** Similies, Sangam Period, Literature

**முன்னுரை**

தமிழினத்தின் தொன்மையையும் பெருமையையும் மட்டுமல்லாது அவ்வினத்தைச் சார்ந்த ஆதிக் கால மக்களின் வாழ்க்கை முறை, கலை, கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பொருட்டே சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களும் தமிழறிஞர்களும் இலக்கியத்தினை அகம் புறமென இருவகையாகப் பிரித்து, காதலையும் வீரத்தையும் சங்க இலக்கியத்தின் உயிர் நாடியாக்கினர். அவ்வகையில், ஆணும் பெண்ணும் ஒருவரோடு ஒருவர் கூடும்போது பிறக்கும் இன்பமானது அவர்களது அகத்தால் அஃதாவது, உள்ளத்தால் உணரப்படுவது என்பதனாலேயே அவ்வுறவினை மையப்படுத்திப் படைக்கப்பட்ட இலக்கியங்களானது அக இலக்கியங்களாகத் திகழ்கின்றன (கே.பிள்ளை, 2009). அவை அகத்திணை நூல்கள் என்றும் பரவலாக அறியப்படுகின்றன.

குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை எனச் சங்க இலக்கியங்களுள் பல அகத்திணை நூல்கள் உள்ளன. ஆயினும், எட்டுத்தொகைத் தொகுப்பில் அடங்கிய அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்து நூல்களும் இன்றளவிலும் வாசர்கள் மத்தியில் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்திய அக இலக்கிய நூல்களாக விளங்குகின்றன. அதனைத் தொடர்ந்து, இவ்வாய்வானது அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்து அக இலக்கியங்களில் காணப்படும் காதல் சார்ந்த உவமைகளை அடையாளம் கண்டு, அவற்றில் காணப்படும் புதைநிலைக் கருத்துகளை ஆராயும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது நூலக ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலக ஆய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களும் தரவுகளும் அக இலக்கியத்தை மையப்படுத்திய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்களின் மூலம் திரட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக, 2023இல் முனைவர் க.வெள்ளியங்கிரி 'சங்க இலக்கியங்களில் நீர்வாழ் விலங்குகள்' எனும் தலைப்பில் இயற்றிய ஆய்விதழில், தலைவன் தலைவிக்கிடையிலான உறவினை நீர்வாழ் விலங்குகளோடு உவமைப்படுத்தப்பட்டிருந்தது. இதுபோல் அக இலக்கியத்தை மையப்படுத்திய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்களின் வழி போதுமான தகவல்களும் தரவுகளும் திரட்டப்பட்ட பிறகு, பண்புசார் முறையைப் பயன்படுத்தி இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது.

**தரவுப் பகுப்பாய்வு**

அகத்திணைப் பாடல்களில் காணப்படும் உவமைகளானது, சங்ககால மக்களின் காதல் வாழ்க்கையை எக்கால வாசகர்களும் ஆழமாக உணரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றாக நற்றிணையின் 61ஆம் பாடலைக் காணலாம். சிறுமோலிகனார் எனும் புலவரால் குறிஞ்சித் திணையை மையப்படுத்தி எழுதப்பட்ட இப்பாடலில், தலைவனைப் பிரிந்த தலைவியின் மனவருத்தமானது அம்பு எய்யப்பட்ட பெண் மானின் வருத்தத்தோடு உவமைப்படுத்தப்பட்டுள்ளது.

“கேளாய் எல்ல தோழி! அல்கல்
வேண் அவா நலிய வெய்ய உயிரா,
ஏ மான் பிணையின் வருந்தினெனாக,”

எனத் தொடங்கும் அப்பாடல் வரியின் வழி இதனை அறிய முடிகிறது. தலைவனைப் பிரிந்திருக்கும் துயரானது தன்னை எவ்வளவு ஆழமாகக் காயப்படுத்துகிறது என்பதனைத் தோழிக்கு உணர்த்த “ஏடி தோழி! இதனைக் கேள்! நேற்று இரவு அவன் மீது கொண்ட அதிக விருப்பத்தால் வருந்தி, பெருமூச்சு விட்டு, அம்புப்பட்ட பெண் மான் போல் துடித்தேன்”, எனத் தலைவி கூறியுள்ளார். இப்பாடல் வரியிலுள்ள உவமையானது, தலைவன் தலைவிக்கிடையில் நிலவும் பிரிவின் கொடுமையை வாசகர்களுக்கு நன்கு விளக்கும் பொருட்டு விளங்குகிறது.

தொடர்ந்து, குறுந்தொகையின் 18ஆவது பாடலிலும் தலைவன் தலைவிக்கிடையிலான காதலை வெளிக்கொணரும் உவமை அடங்கியுள்ளது. கபிலர் எனும் புலவரால் எழுதப்பட்ட அப்பாடலில், தலைவியைக் காண வரும் தலைவனிடம் தோழி, “தலைவியின் காதல் நோய் மிகவும் பெரிது. அவளால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அவளை நீ விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும்”, என்று கூறுகிறாள்.

“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே”

எனும் அப்பாடலின் வரிகளின் மூலம் தலைவனின் காதலானது வேலிக்குள் பாதுகாப்பாக இருந்துகொண்டு, கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் வேர்ப்பலாவின் பழம் போன்றது என்றும், தலைவியின் காதலோ சிறிய கிளையில் இருந்து தொங்கும் பாதுகாப்பில்லாத பெரிய பலாப்பழத்தைப் போன்றது என்றும் தோழி உவமைப்படுத்தியுள்ளாள். அதோடு, தலைவன் மீது தலைவி கொண்ட அன்பானது கனிந்து முதிர்ந்த பழம் போல் முதிர்ச்சியைக் கொண்டது என்பதையும் அவ்வுவமையின் வழி அறிய முடிகிறது.

மேலும், 57ஆவது குறுந்தொகைப் பாடலின் வழி சிறைக்குடி ஆந்தையார் காதல் மிகுந்த தலைவன், தலைவிக்கிடையிலான பிரிவுத் துன்பத்தைத் தனது அற்புதமான உவமை மூலம் வெளிப்படுத்தியுள்ளார். தலைவியின் காதலை அறிந்த அவளது பெற்றோர், தலைவியை வெளியே சென்று தலைவனைச் சந்திக்க விடாமல் காவல் போட்டனர். அவ்வேளையில் தலைவனைச் சந்திக்க முடியாமல் வருந்திய தலைவி, தன் துன்பத்தைத் தோழியிடம் இவ்வாறு தெரிவிக்கிறாள்.

"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவேம் ஆகிய வுலகத்
தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே".

நீர்வாழ்பறவைகளானது ஆணும் பெண்ணுமாக ஒன்றையொன்று பிரியாமல் வாழ்வன. அவை குளத்தில் இணைந்து செல்லும்போது, அவற்றின் இடையே பூ ஒன்று இடைப்பட்டுத் தடையை ஏற்படுத்தும் அந்த ஒரு நொடி பிரிவானது, ஓர் ஆண்டுக் கால அளவிலான பிரிவாக எண்ணி வருந்துமாம். அந்தப் பறவைகள் போல் ஓருயிர் ஈருடல்களாகத் தலைவனும் தலைவியும் வாழ்ந்து வந்தனர். அந்நிலையில் தலைவன் பிரிய நேருமாயின் ஓருயிர் ஓருடலில் வாழும் இழிவு ஏற்படும் என்றும், அப்பிரிவினைக் காட்டிலும் உயிர் துறப்பது மேலென்றும் தலைவி கூறுகிறாள். தலைவன், தலைவிக்கிடையிலான நெருக்கத்தை நீர்ப்பறவைகளுடன் உவமைப்படுத்தியதன் வழி, சிறைக்குடி ஆந்தையார் அவர்களின் அளவற்ற அன்பினை வாசகர்களிடையே புலப்படுத்தியுள்ளார்.

அதுமட்டுமன்றி, ஐங்குறுநூற்றிலும் இது போன்ற காதல் சார்ந்த உவமைகளைக் காண முடிகிறது. கபிலர் குறிஞ்சித் திணையை மையப்படுத்திப் பாடிய 226ஆவது ஐங்குறுநூற்றுப் பாடலான,

“அம்ம வாழி தோழி நம்மலை
நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தன்
கொங்குஉன் வண்டின் பெயர்ந்துபுற மாறிநின்
வன்புடை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தனன் இனியே”

எனும் வரிகளில் தலைவனது செயலைத் தோழி சோலையிலுள்ள வண்டுகளோடு ஒப்பிட்டுள்ளாள். மலையில் நல்ல குளுமையான சோலையில் மணம் பரப்பிக்கொண்டு பூத்திருக்கும் காந்தள் மலரில் தேனை உண்ட பின்னர் அதனை விட்டுவிட்டு ஓடும் வண்டினைப் போல, தலைவனோ தலைவியின் மேனி அழகினைக் கவர்ந்துகொண்டு அன்பு இல்லாதவனாக மாறிவிட்டதைத் தோழி சுட்டிக்காட்டும் பொருட்டு அப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலின் மூலம் தலைவன் தலைவியின்பால் கொண்ட காதலில் ஏற்பட்ட சரிவினை நன்கு உணர முடிகிறது.

அதோடு, கலித்தொகையிலும் தலைவன் தலைவிக்கிடையிலான காதலை மையப்படுத்திய உவமைகள் அடங்கிய பாடல்கள் பல உள்ளன. எடுத்துக்காட்டாக, பரணர் எழுதிய

“ஊருண் கேணி உண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே”

எனும் 399ஆம் கலித்தொகைப் பாடலில் தலைவனை வரைவுக்குத் தூண்டுமாறு தோழிக்குக் குறிப்புணர்த்தும் தலைவி, தன்னுடைய சூழ்நிலையை உண்ணும் நீர் நிலைகளோடு உவமைப்படுத்துகிறாள். உண்ணும் நீர் நிலைகளில் பாசி இருப்பின், ஊரார் அவற்றை நீக்கி உண்ண வேண்டியிருக்கும். ஊரார் நீர் நிலைகளை நீங்கினால் பாசி மீண்டும் நீரை மூடிக்கொள்ளும். அதே போல, தலைவன் தன்னோடு கூடியிருக்கும்போது துன்பம் நீங்கித் தலைவி இன்பம் அடைகிறாள். ஆயினும், தலைவன் பிரிந்து சென்ற மறுகனமே தலைவியை மீண்டும் துன்பம் ஆட்கொள்கிறது என்பதை உணர்த்தும் நோக்கில் பரணர் அவ்வரிகளை எழுதியுள்ளார். தலைவனது பிரிவால் தலைவிக்கு நிலவிய துன்பத்தைக் குளத்துப் பாசி போன்ற எளிமையானவற்றோடு உவமைப்படுத்தினாலும், அத்துன்பத்தின் தாக்கத்தைத் துள்ளியமாக வாசகர்களுக்கு எடுத்துரைக்கும் பொருட்டே விளங்குகிறது.

அதனைத்தொடர்ந்து, மருதத் திணையைச் சார்ந்து நற்றிணைப் பாடலான,

“வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ,
பழனப் பல் புள் இரிய, கழனி
வாங்கு சினை மருதத் தூங்குதுணர் உதிரும்
தேர் வண் விராஅன் இருப்பை அன்ன, என்
தொல் கவின் தொலையினும் தொலைக! சார
விடேஎன்: விடுக்குவென் ஆயின், கடைஇக்
கவவுக் கை தாங்கும் மதுகைய குவவு முலை
சாடிய சாந்தினை; வாடிய கோதையை;
ஆசு இல் கலம் தழீஇயற்று;
வாரல்; வாழிய, கவைஇ நின்றோளே!”

எனும் வரிகளுள், தலைவன் தலைவிக்கிடையிலான ஊடலைத் தகுந்த உவமையோடு பரணர் எழுதியுள்ளார். பரத்தை வீட்டிலிருந்து திரும்பி வரும் தலைவனிடம் ஊடல் கொள்ளும் தலைவி, “நீண்டு கிடக்கும் நெல் வயலில் கதிரை அறுக்கும்போது பறவைகள் வந்து கொத்திச் செல்வதைத் தடுப்பதற்காகத் தண்ணுமை என்ற மேளத்தை முழங்குவார்கள். அந்த முழக்கத்தைக் கேட்டதும் பறவைகள் அஞ்சி, வயலில் தாழ்ந்து நிற்கும் கிளைகளைக் கொண்ட மருத மரத்தின் மீது சென்று அமரும். அதன் சுமை தாங்காது மரத்தில் இருந்த பூக்கள் எல்லாம் வயலில் உதிரும். அத்தகைய செழிப்பான ஊர் இருப்பையூர். அதுபோன்ற செழிப்பான எனது இயற்கை அழகு கெட்டுப் போனாலும் பரவாயில்லை. எனது கணவா! உன்னை எனது அருகில் நெருங்க விட மாட்டேன்”, எனக் கூறுகிறாள். இதன்வழி, தலைவி தன்னுடைய தேகத்தை இருப்பையூரின் செழிப்புமிக்க இயற்கை வளத்தோடு உவமைப்படுத்தியதோடு, பரத்தையோடு உறவுகொண்ட தலைவன் இனித் தன்னைத்

தீண்டக்கூடாது எனக் கூறுகிறாள். தலைவன் தலைவிக்கிடையிலான காதல், பிரிவு மட்டுமல்லாது ஊடலிலும் இம்மாதிரியான உவமைகளைக் கொண்டு புலவர்கள் அகப் பாடல்களைப் பாடியுள்ளது இதன்வழி புலப்படுகிறது.

## நிறைவுரை

இன்றளவிலும் சில அக இலக்கியப் பாடல்களை எழுதிய புலவர்களின் பெயர்கள் தெரியாமலே போனாலும், அவர்கள் எழுதிய உவமைகளால் பெரும் சிறப்பைப் பெற்று, இலக்கியவாதிகள் மத்தியில் பிரபலமடைந்த பாடல்களும் சங்க இலக்கியத்தில் இருக்கின்றன. ஆக, காதல் குறித்துச் சங்க அக இலக்கியப் பாடல்களில் எண்ணற்ற உவமைகள் உள்ளன என்பதை இவ்வாய்வுக்கட்டுரையில் திரட்டப்பட்ட தரவுகளின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது.

## துணைநூற்பட்டியல்


https://www.vikatan.com/literature/arts/literature-and-love

Subramanian, K. (1996). Plant Creepers in the Ancient Tamil Love Poetry (பண்டைய தமிழ் காதல் கவிதையில் தாவரப் பெயர்கள்). Journal of Indian Studies (இந்திய ஆய்விதழ்), 6, 35-46.

Velliyangiri, K. (2023). சங்க அக இலக்கியங்களில் நீர்வாழ் விலங்குகள்: Aquatic animals in Sangam Agam Literature. PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES, 3(1), 41–50. https://pulamejournal.com/index.php/journal/article/view/122

அகன் சரவணன். (2020). காதலை தலைமேல் வைத்துக் கொண்டாடிய 5 அகத்திணைப் பாடல்கள்! விகடன் வாசகர்.

செல்வமணி, த. (2022). சங்க இலக்கிய மடலேறுதல்-பெண் மையநோக்கு ‘MADAL EARUDHAL’IN SANGAM LITERATURE-FEMINISM VIEW. இனம் பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் (Inam International E-Journal of Tamil Studies), 8(32), 101-106.

தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணனார் உரை, 2006. பக். 3